# <u>துறையூர் நகராட்சி</u>

2023–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31.10.2023 செவ்வாய் கிழமை **காலை** 10.30 மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை நகர்மன்றத்தலைவர்
துறையூர்நகராட்சி

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>31.10.2023</td><td>01</td><td>துறையூர் நகராட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு விண்ணப்பம் பெற மையங்கள் அமைப்பட்டு உள்ளது. எனவே, மேற்படி பணிகளை மேற்கொள்ள சாமியானா பந்தல், டேபிள், சேர், குடிநீர் வசதி, மின் இணைப்பு வசதி, கழிப்பறை வசதி, முதல் உதவிப்பெட்டி, சாய்வுதளம், விளம்பர பதாதைகள், ஆட்டோ விளம்பரங்கள் ஆகியவை செயல்படுத்த இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி நாள்.11.07.2023–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 12.07.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விலைப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.07% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.10% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட விலைபுள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.2233/2023/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:67 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>02</td><td>துறையூர் நகராட்சியில் கணினி பிரிவில் இயங்கி வரும் வரும் Numeric 5 KVA Online UPS–2 Nos (SL No.11 100503304, 11 140706621) மற்றும் 2 KVA Online UPS 1 No (sL No.1074309167)–க்கான ஆண்டு பராமரிப்பு Novateur electrical and Digital System Pvt.Ltd., நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி ஆண்டு பராமரிப்பு 30.09.2023 உடன் முடிவடையவுள்ளது. ஆகவே, மேற்கண்ட 5KVA UPS2 எண்ணிக்கை மற்றும் 2KVA UPS1 எண்ணிக்கை ஆகியவற்றை Novateur Electrical and Digital Systems Pvt.Ltd, Madurai நிறுவனத்தினரிடம் பராமரிப்பினை மேலும் ஒரு வருடம் (01.10.2023 முதல் 30.09.2024 வரை) புதுப்பித்துக்கொள்ளவும். அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.23000/–க்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.4639/2012/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்68 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>03</td><td>துறையூர் நகராட்சியில் கணினி பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் 5KVA Aarga Online UPS (No.2K310WB115)– க்கான ஆண்டு பராமரிப்பு காலம் 31.10.2023 உடன் முடிவடைந்து விடுவதால் மீண்டும் ஒரு வருடம் (01.11.2023 முதல் 31.10.2024 வரை) மேற்படி UPS–யை ஆண்டு பராமரிப்பு பணியை T.Tech Trichy (Formerly power com Technologies Trichy) நிறுவனம் மூலம் செய்திடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4074/2013/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.</td><td>தீர்மான எண்:69 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td>31.10.2023</td><td>04</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது 24.06.2023ஆம் தேதிய ந.க.எண்.27968/2022/தி1 என்ற எண்ணிட்ட கடித்தில் அறிவுறுத்தியுள்ளதின்படி துறையூர் நகராட்சியில் புதிதாக திறக்கப்படவுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தேவையான 10 கணினி மற்றும் 3 பிரிண்டர் இயந்திரங்கள் GEM விலைவிகித்தில் வாங்கிட ஆகும் செலவினத்தொகை ரூ.1276800/-க்கு மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1348/2022/இ1)<br><br>அலுவலக குறிப்பு :<br>1. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவின தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:70 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>05</td><td>தமிழக முதலமைச்சர் அவர்கள் 27.07.2023 அன்று திருச்சி வருகை புரிந்ததையொட்டி கீழ்கண்ட தினசரி (காலை & மாலை) நாளிதழ்களில் கால் பக்கத்திற்கு பேப்பர் விளம்பரம் செய்ய நகர்மன்றம் ஒப்புதல் அளித்துள்ளதின் அடிப்படையில் ஐந்து தினசரி நாளிதழ்களில் துறையூர் நகராட்சி குறித்து விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.130040/-க்கு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விளம்பரம் செய்த பத்திரிக்கை விவரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>மாலைமலர், தினசரி நாளிதழ் (மாலை)</td><td>20000.00</td></tr>
<tr><td>2</td><td>மாலைமலர் ஆங்கில தினசரி நாளிதழ் (மதியம்)</td><td>18900.00</td></tr>
<tr><td>3</td><td>மாலை தமிழகம்</td><td>18900.00</td></tr>
<tr><td>4</td><td>தினத்தந்தி</td><td>33600.00</td></tr>
<tr><td>5</td><td>Kal Publication Pvt.Ltd., (தினகரன் நாளிதழ்)</td><td>38640.00</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>130040.00</td></tr>
</table>
(ந.க.எண்.2432/2023/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:71 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>06</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு நகராட்சி மூலமாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதற்கான டோக்கன் நம்பர் 16001 முதல் 320001 வரை மொத்த புத்தகம் – 20 இந்து அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது. அதற்கான தொகை ரூ. 2000/-ஐ திருமதி. கே. சரஸ்வதி அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:72 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>07</td><td>துறையூர் நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், இரவு காவலர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான சீருடைகள் வருடத்திற்கு இரண்டு என்ற எண்ணிக்கையில் வாங்கி வழங்கிட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.168, நாள்.16.08.2015-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின்படி பொதுசுகாதார பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் சீருடை அரைக்கால் சட்டைக்கு பதிலாக முழுக்கால் சட்டை, வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்திலும் (ந.க.எண். 24580/ஜெ/2015, நாள்.13.06.2016) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கூட்டுறவு சங்கத்தினால் வரையறுக்கப்பட்ட நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து இந்நகராட்சிக்கு சீருடைகள் கொள்முதல் செய்யவும் மற்றும் மேற்கண்ட பணியாளர்களுக்கு சீருடை தைத்துக்கொள்ளவும் தூய்மை பணியாளர்களுக்கு காலணிகள் வாங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற காதிகிராப்ட் என்ற நிறுவனத்திலிருந்து காலனிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கான உத்தேச செலவினம் ரூ.2.50/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3570/2018/எச்1)<br><br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>.</td><td>தீர்மான எண்:73 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 31.10.2023 | **08** | துறையூர் நகராட்சி பகுதியில் தெருக்களில் சுற்றித்திரிந்த நாய்களை பிடித்து அப்புறப்படுத்தியது தொடர்பாக உரிய விதிமுறைகளை பின்பற்றவில்லை. துறையூர் திரு. பாலமுரளிதரன் த/பெ. ரத்தினசாமி 68, கூட்டுறவு நகர், துறையூர் என்பவர் W.P.(MD) No.4198/2019–ல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக அரசு உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. இராஜராஜன், அவர்கள் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்கனவே, ரூ. 10000/– வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் மேற்கண்ட வழக்கு தொடர்ந்து எதிர்வாதுரை 08.09.2023–ல் தாக்கல் செய்துள்ளார். அதற்கு கூடுதல் கட்டணமாக ரூ. 5000/– வழங்குமாறு தெரிவித்துள்ளார். அதனை ஏற்று ரூ. 5000/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.883/2019/எச்1)<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண் :74 அனுமதிக்க ப்பட்டது |
| 31.10.2023 | **09** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் கடிதம் எண்.0830/அ8/2022, நாள்.12.04.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளை உற்பத்தி கலன்களை அகற்றுதல், காய்ச்சல் ஏற்பட்ட நபர்களை கண்டறிதல், கணக்கெடுத்தல் போன்ற பணிகளை வீடுவீடாக சென்று மேற்கொள்ள 30 களப்பணியாளர்களை நியமித்துக் கொள்ள அறிவுறைகள் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் டெங்கு களப்பணியாளர்கள் 30 எண்ணிக்கையில் சுய உதவிக்குழு மூலமாக பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி நாள்.24.02.2023–ன்படி 01.05.2023 முதல் 30.06.2023 வரை பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் பொதுசுகாதாரம் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் வீடுகள், அரசு, அரசு சாரா அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளவும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையிலிருந்து காய்ச்சல் கண்டவர்களின் அறிக்கை பெறவும். பொதுமக்களின் நலன்கருதி தொடர்ந்து பணிபுரிய மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி 2019–20–ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி **ரூ.385/–** அடிப்படையில் **ரூ 8.45 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்காணும் பணியாளர்களுக்கு செலவினம் மேற்கொள்ளவும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை நிர்வாக நலன் கருதி 3 மாதம் அல்லது ஒப்பந்தப்புள்ளி பணி உத்தரவு வழங்கும் காலம் வரை எது முன்னர் வருகிறதோ அதுவரையிலும் இச்செலவினத்தை வருவாய் நிதியில் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1220/2022/எச்1)**<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதியை மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:75 அனுமதிக்க ப்பட்டது |
| 31.10.2023 | **10** | துறையூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016–ம் விதி 3(8)ன்கீழ் பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிகமான அளவுள்ள் திடக்கழிவுகள் உருவாகக்கூடிய மத்திய/ மாநில அரசுதுறை நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், பள்ளிகள், வழிபாட்டுத்தலங்கள், விளையாட்டு அரங்குகள், விளையாட்டு வளாகங்கள், துணி விற்பனையகங்கள், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சந்தை சங்கத்தினர் போன்றவர்கள் மிகை கழிவு உருவாக்குபவர்கள் என்னும் வகை (Bulk Waste Generators) உடையவர்களாவர் அறியும்பொருட்டு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்கள் வழியாக 08.06.2023 அன்று தினகரன் நாளிதழில் விளம்பர படுத்தப்பட்டுள்ளது. அதற்கு விளம்பர கட்டணமாக M/S. Bright Advertising Chennai, என்ற நிறுவனம் ரூ. 21976/–க்கு வழங்குமாறு பட்டியல் சமர்ப்பித்துள்ளது. அதனை ஏற்று விளம்பரம் கட்ணத்திற்குரிய தொகையை வழங்கலாம். (ந.க.எண்.**3870/2022/எச்1)**<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:76 அனுமதிக்க ப்பட்டது |
| 31.10.2023 | **11** | துறையூர் நகராட்சி பொதுசுகதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பொதுமக்களிடமிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டியிருக்கும் பொதுசுகாதார வாகனமான TN 48AT 8893–க்கு தகுதிச்சான்று கட்டணம், சாலைவரிக்கட்டணம், வாட்டர் சர்வீஸ், பர்மீட், ரினிவல் கட்டணம் மற்றும் வாகனத்திற்கு பெயிண்ட் மற்றும் ஒளிர்வூட்டும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு மற்றும் இதர வேலைகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.130000/–க்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3104/2023/எச்1) | தீர்மான எண்:77 அனுமதிக்க ப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | |
| 31.10.2023 | **12** | துறையூர் நகராட்சி பொதுசுகதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டியிருக்கும் பொதுசுகாதார வாகனமான TN 48AT 8908–க்கு தகுதிச்சான்று கட்டணம், சாலைவரிக்கட்டணம், வாட்டர் சர்வீஸ், பர்மீட், ரினிவல் கட்டணம் மற்றும் வாகனத்திற்கு பெயின்ட் மற்றும் ஒளிர்வூட்டும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு மற்றும் இதர வேலைகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.130000/–க்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3103/2023/எச்1)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:78 அனுமதிக்கப்பட்டது |
| 31.10.2023 | **13** | துறையூர் நகராட்சி பொதுசுகதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டியிருக்கும் பொதுசுகாதார வாகனமான TN 48AT 8975–க்கு தகுதிச்சான்று கட்டணம், சாலைவரிக்கட்டணம், வாட்டர் சர்வீஸ், பர்மீட், ரினிவல் கட்டணம் மற்றும் வாகனத்திற்கு பெயின்ட் மற்றும் ஒளிர்வூட்டும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு மற்றும் இதர வேலைகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.130000/–க்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3101/2023/எச்1)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:79 அனுமதிக்கப்பட்டது |
| 31.10.2023 | **14** | துறையூர் நகராட்சி பொதுசுகதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டியிருக்கும் பொதுசுகாதார வாகனமான TN 48AT 8950–க்கு தகுதிச்சான்று கட்டணம், சாலைவரிக்கட்டணம், வாட்டர் சர்வீஸ், பர்மீட், ரினிவல் கட்டணம் மற்றும் வாகனத்திற்கு பெயின்ட் மற்றும் ஒளிர்வூட்டும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு மற்றும் இதர வேலைகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.122000/–க்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3102/2023/எச்1)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:80 அனுமதிக்கப்பட்டது |
| 31.10.2023 | **15** | துறையூர் நகராட்சி பொதுசுகதாரபிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து வாங்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டியிருக்கும் பொதுசுகாதார வாகனமான TN 48AT 8984–க்கு தகுதிச்சான்று கட்டணம், சாலைவரிக்கட்டணம், வாட்டர் சர்வீஸ், பர்மீட், ரினிவல் கட்டணம் மற்றும் வாகனத்திற்கு பெயின்ட் மற்றும் ஒளிர்வூட்டும் ஸ்டிக்கர் ஒட்டுவதற்கு மற்றும் இதர வேலைகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.130000/–க்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3100/2023/எச்1)<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:81 அனுமதிக்கப்பட்டது |
| 31.10.2023 | **16** | துறையூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் பணியாளர்களுக்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிட அறிவுறுத்தியுள்ளார்கள். MCC சென்டர், பேருந்து நிலையம், கழிப்பிடங்கள், மார்க்கெட் ஆகிய இடங்கள் நல்லமுறையில் பராமரிக்கவும், குப்பைகளை அகற்ற தேவையான கீழ்கண்ட தளவாட பொருட்கள் மற்றும் கிருமிநாசினி பொருட்களை விலைப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி அளிக்கப்பட்டுள்ள பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரு நிறுவனங்கள் தகுதியான விலைப்புள்ளிகள் 04.10.2023–ல் | தீர்மான எண்:82 அனுமதிக்கப்பட்டது |

அளித்துள்ளனர். எனவே, இவ்விரு விலைப்புள்ளிகளையும் ஏற்கலாம். மேலும், விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அவை பின்வருமாறு.

| வ. எ ண் | பொருள் | எண்ணிக்கை | ஸ்ரீ லெட்சுமி டிரேடர்ஸ், துறையூர் ரூ. | ஜி.பி. என்டர்பிரைசஸ், திருச்சி ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இரும்பு கைபிடியுடன் மண்வெட்டி | 1 | 478 | 460 |
| 2 | கடப்பாறை | 1 | 791 | 767 |
| 3 | சீப்பு கொக்கி (கம்பி பிடியுடன்) | 1 | 557 | 531 |
| 4 | பெரிய ஆப்பை | 1 | 561 | 531 |
| 5 | சின்ன ஆப்பை | 1 | 439 | 413 |
| 6 | பல்லு கொக்கி | 1 | 525 | 531 |
| 7 | மிளாரு (கூட்டுவது) | 1 | 425 | 413 |
| 8 | தென்னை விளக்கமாறு | 1 | 51 | 41 |
| 9 | கொடுவாள் (அறுவாள்) | 1 | 555 | 531 |
| 10 | கருக்கு அருவாள் (புல் அறுக்கு) | 1 | 201 | 177 |
| 11 | அன்னகூடை (அலுமினியம்) | 1 | 602 | 566 |
| 12 | கைகொரண்டி | 1 | 301 | 283 |
| 13 | பிரஸ் (குச்சுடன்) | 1 | 360 | 342 |
| 14 | டாய்லெட் பிரஸ் | 1 | 153 | 142 |
| 15 | பிளிச்சிங்க் பவுடர் | 1 கி | 53 | 46 |
| 16 | சுண்ணாம்பு நீர்த்தூள் | 1கி | 10 | 9.35 |
| 17 | பினாயில் (கருப்பு) | 1 லி | 83 | 77 |
| 18 | ஆசிட் | 1 லி | 71 | 65 |

இவ்விரு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஜி.பி. என்டர்பிரைசஸ், திருச்சி என்ற நிறுவனம் வ.எண். 1 முதல் 18 வரை உள்ள தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். எனவே, அதனை ஏற்று கொண்டு உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2328/2023/எச்1)**

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 31.10.2023 | **17** | தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022 மற்றும் விதிகள் 2023 தொடர்பான பயிலரங்கம் அலுவலர்களுக்கு 22.06.2023 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்டதற்கு வாடகை, மேடை அலங்காரம், சிற்றுண்டி மற்றும் உணவு வழங்கப்பட்டதற்கான செலவு தொகை ரூ15000/- உரிய வங்கி கணக்கு தலைப்பில் ECS முறையில் செலுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12091/2023/எம்எ2 நாள் 09.08.2023 – ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ரூ 15000/- யினை செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.2800/2023/சி1)**<br>(அ.கு)<br>அ. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ஆ. நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம். | தீர்மான எண்:83 அனுமதிக்கப்பட்டது |
| 31.10.2023 | **18** | நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண். 20789/2021/UPA2 நாள்.07.09.2023–ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 விதிகள் அறிவிக்கை வெளியிட எதுவாக மாதிரி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/UPA2 நாள்.03.09.2018 உடன் இணைத்து அனுப்பட்டுள்ளது. அதன்படி சாலையோரவியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 விதிகள் வெளியிட அறிவிக்கை மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:84 அனுமதிக்கப்பட்டது |

**துறையூர் நகராட்சி**

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் துறையூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 199 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், துறையூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

**அத்தியாயம்–1**

**முதனிலை**

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் துறையூர் நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

   (2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

   **(i)** ""சட்டம்"" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

   **(ii)** ""விற்பனைதிட்டம்"" என்பதுசட்டத்தின்21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

   **(iii)** ""விதிகள்"" என்பதுதமிழ்நாடுசாலையோரவியாபாரிகள் (வாழ்வாதாரபாதுகாப்புமற்றும்விற்பனைஒழுங்குமுறை) விதிகள், 2015 என்றுபொருள்படும்;

   **(IV)** ""திட்டம்"" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) விதிகள்2015 என்று பொருள்படும்;

   **(V)** ""நகர விற்பனைக் குழு"" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

**அத்தியாயம்–2**

**விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்**

**3** (1) பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து துறையூர் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களின்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 30 மீட்டர் நீளத்திற்கு

(Viii) 'எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்
வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு**– கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு**.– எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

(Viii) உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது

சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக் கூடாது.

**5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு,–** சாலையோ வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்,

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்,

(ii) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவேண்டும்,

(iii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்பட வேண்டும்,

(iV) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும்போது இருக்க வேண்டும்.

(V) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்,

(Vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்,

(Viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016ஐ கடைப்பிடிக்க வேண்டும்,

(x) தகுதியுடைய அலுவலர் கோரும்போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும், மற்றும்

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம்–3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம்,– (1)** சாலையோரவியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உப விதி (1)ன்படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின்படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழு நேரம்) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1200/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள்வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.2500/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ.5000/–க்கு குறையாமல் |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதி நேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.6000/–க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1200/–க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ.2500/–க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் (மேட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன்) | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1200/– |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.2500/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.5000/– |
| 4. | நடமாடும் விற்பனையாளர் | 10 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.6000/– |

| | | | |
|---|---|---|---|
| | (மேட்டார் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ.1200/– |
| | | 25 சதுர அடிகளுக்குமேல் | வருடத்திற்கு ரூ.2500/– |
| 5. | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | – | வருடத்திற்கு ரூ.5000/– |

(3) மூன்று வருடங்களுக்கு ஒரு முறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

**7. பராமரிப்பு கட்டணம்,–** (1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உப விதி (1)யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் மாதத்திற்கு 100/–க்கு குறையாமலும், ரூ. 1000/–க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 10% சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

**8. அபராதம் விதித்தல்,–** எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்,

(i) விற்பனை சான்றிதழ்ப்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில், அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,
மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனைபாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறினால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

**அத்தியாயம்– 4**

**பலவகை**

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல்.–** (1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக் குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுபடுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குபடுத்துதல்.–** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல்,–** (1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (rechargeable lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோக படுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனி நபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கக் கூடாது.

(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும்.

அலுவலககுறிப்பு: சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை

<table>
<tr><td></td><td></td><td>ஒழுங்குமுறை) சட்டம், 2014 விதிகள்அறிவிக்கைமன்றம்ஒப்புதல்வழங்கலாம். அறிவிக்கைவெளியிடுவதற்கு ஆகும்செலவு தொகையினை நகராட்சிபொதுநிதியிலிருந்து செலவுசெய்யமன்றம் அனுமதிவழங்கலாம்.<br>ந.க.எண் :2918/2023/F1</td><td></td></tr>
<tr><td>31.10.2023</td><td>19</td><td>துறையூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வந்த கீழ்கண்ட 5 நபர்களும் அலுவலக பயன்பாடு மற்றும் ஆணையரின் ஊர்தி ஓட்டுநர், அலுவலக உதவியாளர்கள் 3 நபர்களும் மற்றும் குடிநீர் விநியோக பணியாளர்களாக இரண்டு நபர்கள் ஆக 5 நபர்கள் பணிபுரிந்து வந்தனர். தற்போது மேற்படி திட்டத்தில் பணிபுரிந்த 5 நபர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தனியார் மயமாகிவிட்டதால் 30.06.2023 முதல் விலக்கிக்கொள்ளப்பட்டனர். எனவே மேற்கண்ட நபர்கள் துறையூர் நகராட்சி அலுவலக அத்தியாவசிய பணியான ஆணையர் ஊர்தி ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் குடிநீர் விநியோக பணியினை மேற்கொண்டு வந்தனர். இதற்கென பணி விதிகளில் பணியாளர் ஒதுக்கீடுகள் ஏதும் வழங்கப்படவில்லை.<br>எனவே நகராட்சி நிர்வாகம் பணி ஒதுக்கீடு செய்து பணி நியமனம் செய்திடும் வரை அலுவலக அவசர அவசியம் கருதி 5 பணியாளர்கள் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் (01.10.2023 முதல் 29.02.2024 வரை) 5 மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விலை விகிதத்தில் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.4.75 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.3381/2022/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்:85 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>20</td><td>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் 1 முதல் 24 வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள மக்களுக்கு துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.7 பெரியார் நகர் பகுதியில் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு உள்ள நீரினை பெரியார் நகருக்கு பகிர்மானக் குழாய் மூலம் வழங்கிட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>(ந.க.எண். /2023/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:86 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>21</td><td>துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.12 சௌடாம்பிகா தெரு மாதவன் சந்தில் பகிர்மானக் குழாய் இல்லாத்தால் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு உள்ள நீரினை பகிர்மானக் குழாய் மூலம் வழங்கிட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>(ந.க.எண்.3399/2023/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:87 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>31.10.2023</td><td>22</td><td>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் 1 முதல் 24 வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள மக்களுக்கு காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், காய்ச்சல் அதிகமாக வர வாய்ப்புள்ளது. அதனை தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கையாக பொதுமக்களுக்கும், பள்ளி மாணவ மாணிவியர்களுக்கும் நிலவேம்பு குடிநீர் மற்றும் கபசுர குடிநீர் வழங்க டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை ஆய்வுக்கூட்டத்தில் தடுப்பு நடவடிக்கை ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன் அரசு நிறுவனமான IMCOPS நிறுவனத்தில் கீழ்கண்டுள்ள விபரப்படி பொருட்கள் வாங்கி வழங்கிடவும்.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>பொருட்கள் விபரம்</th><th>கிலோ</th></tr>
<tr><td>1</td><td>நிலவேம்பு பொடி</td><td>100</td></tr>
<tr><td>2</td><td>கபசுர குடிநீர் பொடி</td><td>100</td></tr>
</table></td><td>தீர்மான எண்:88 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>மேலும், IMCOPS நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது. இப்பொருள்கள் வாங்குவதற்கு உத்தேச செலவின தொகை ரூ.300000/- மூன்று இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. (ந,க.எண்.3333/2023/எச்1)<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.10.2023</td>
<td>23</td>
<td>இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட தனியார் மருத்துவமனையிலும் பொது இடங்களிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை ஆகிய நிகழ்வுகளை கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் – 2023 மற்றும் செப்டம்பர் – 2023 ஆகிய மாதங்களில் கீழ்கண்ட விபரப்படி கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">பிறப்பு மற்றும் இறப்பு விபரம்</th><th colspan="3">ஆகஸ்ட் – 2023</th><th colspan="3">செப்டம்பர் – 2023</th></tr>
<tr><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>பிறப்பு</td><td>44</td><td>34</td><td>78</td><td>44</td><td>37</td><td>81</td></tr>
<tr><td>2</td><td>இறப்பு</td><td>22</td><td>8</td><td>30</td><td>14</td><td>11</td><td>25</td></tr>
<tr><td>3</td><td>இறந்து பிறந்தவை</td><td>1</td><td>2</td><td>3</td><td>1</td><td>2</td><td>3</td></tr>
</table>
<br>மேற்கண்ட விபரபடி ஆகஸ்ட் – 2023 மற்றும் செப்டம்பர் – 2023-ல் மாதங்களில் நிகழ்வுள்ள பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை எண்ணிக்கையை இந்நகர்மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந,க.எண்.3389/2023/எச்1)<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:89 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.10.2023</td>
<td>24</td>
<td>இந்நகராட்சியில் முதலமைச்சர் அவர்களின் சமூக நலத்துறையின் மான்ய கோரிக்கையின்போது அரசுப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்கும் சிறப்பு திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்1-ல் தெரிவித்த ஊதிய விகிதம் பள்ளிகளில் மாணவர்களுக்கு உணவு பரிமாறும் பணிக்கு 100 மாணவர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பணியாளர் சுயஉதவிக்குழு, இல்லம்தேடி கல்வி பணியாளர் அல்லது விருப்பம் உள்ள குழந்தைகளின் தாயார் ஆகியோர்களில் ஒருவர் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர் அனுமதியோடு நியமித்து மாதந்தோறும் ரூபாய் 1500/- மதிப்பூதியம் கல்விநிதி, பொதுநிதியில் இருந்து வழங்க தெருவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சியில் இயங்கி வரும் காலை சிற்றுண்டி பணிபுரியும் உணவு பரிமாறும் பணியாளர்கள் விபரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் ஒரு பணியாளர் மற்றும் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளியில் ஒரு நபரும் உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1500/- மதிப்பூதியம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.889/2023/சி2)<br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:90 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ஒம்/-இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி